**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.04.2023**

**Case No** : **CC 143 / 2016**

**Deposition of Witness** : **P.W. 7**

| | |
|---|---|
| **Name:** ராமன் | **Caste:** |
| **Father / Husband Name :** பரமசிவம் | **Calling:** |
| **Village:** பழனியப்பபுரம் | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 63** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.04.2023**

முதல் விசாரணை

நான் தற்போது பழனியப்பபுரத்தில் குடியிருந்து என் மகனுடன் இருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு காலை 10.00 மணியளவில் பனைகுளம் அருகில் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகம் வந்தபோது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகம் வெளியே வைத்து கையெழுத்து வாங்கியதால், அதனால் யார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று தெரியாது. எதற்காக கையெழுத்து செய்ய வேண்டும் என காவல்துறையினர் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII  Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.04.2023**

**Case No : CC 143 / 2016**

**Deposition of Witness : P.W. 8**

| | |
|---|---|
| **Name:** திரு. பாலசுப்பிரமணியன் | **Caste:** |
| **Father / Husband Name :** சங்கரகுற்றாலம் | **Calling:** |
| **Village:** தூத்துக்குடி | **Religion:** |
| **Taluk:** தூத்துக்குடி | **Age: 65** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.04.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து கடைசியாக தூத்துக்குடி வட்டம் முள்ளக்காடு பகுதி 1 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி 31.12.2016 அன்று பணிஓய்வு பெற்றேன். வழக்கு சம்பவத்தின்போது தூத்துக்குடி பகுதி 2 கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30.1.2015 அன்று காலை 7.00 மணியளவில் தூத்துக்குடி மதுவிலக்கு காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும் கிராம உதவியாளர் விஜயமூர்த்தி என்பவரும் மதுவிலக்கு காவல்ஆய்வாளர் அலுவலகம் சென்றோம். அங்கு வழக்கு எண்.903/2014 வழக்கின் எதிரி பாலு என்ற பாலசுப்பிரமணியம் அங்கு இருந்தார். அவரை எங்கள் முன்பு எவ்வித துன்புறுத்தலுமின்றி விசாரணை செய்ததில் அவர் எங்கள் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சாத்தான்குளம் வழக்கு எண்.75/2013 தொடர்புடைய சம்பவங்களை கூறினார். அதில் நானும் என்னுடன் விஜயமூர்த்தி என்பவரும் கையொப்பம் செய்தோம். **(3ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அன்று ஒரு நாள் மட்டும்தான் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். காலை 7.00 மணிக்கு சென்று வந்த பின்புதான் அலுவலக பணியை தொடங்கினேன் என்றால் சரிதான். 10.00 மணிக்கு அலுவலகம் தொடங்கும்போது 7.00 மணிக்கு சென்றது குறித்து அலுவலக பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் சென்றிருந்தால் அதில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. காவல்துறையினர் சம்மன் அல்லது தகவல் சொன்னார்களா என்றால் போனில் தகவல் சொன்னார்கள். பின்பு நான் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. மதுவிலக்கு காவல்துறையினரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. உண்மையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருந்தால் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எந்த பொருளும் கண்டுபிடிக்கப்படாததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரியை கைது செய்து வழக்கு பதிவு செய்து அதற்கு பின்னிட்டு நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.04.2023**

**Case No : CC 143 / 2016**

**Deposition of Witness : P.W. 9**

| | |
|---|---|
| **Name:** திரு.விஜயமூர்த்தி | **Caste:** |
| **Father / Husband Name :** ஜனார்த்தனன் | **Calling:** |
| **Village:** தூத்துக்குடி | **Religion:** |
| **Taluk:** தூத்துக்குடி | **Age: 39** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.04.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து திருவைகுண்டம் தாலுகா, மணக்கரை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது தூத்துக்குடி பகுதி 2 கிராம உதவியாளராக பணியில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30.1.2015 அன்று காலை 7.00 மணியளவில் தூத்துக்குடி மதுவிலக்கு காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலர் பாலசுப்பிரமணியன் என்பவரும் மதுவிலக்கு காவல்ஆய்வாளர் அலுவலகம் சென்றோம். அங்கு பாலு என்ற பாலசுப்பிரமணியம் அங்கு இருந்தார். அவரை எங்கள் முன்பு எவ்வித துன்புறுத்தலுமின்றி விசாரணை செய்ததில் அவர் எங்கள் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சாத்தான்குளம் வழக்கு சம்பந்தமாக தொடர்புடைய சம்பவங்களை கூறினார். அதில் நானும் என்னுடன் பாலசுப்பிரமணியன் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கிராம நிர்வாக அலுவலகர் அழைத்ததன் பேரில்நான் சென்றேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு

கிராம நிர்வாக அலுவலர் தகவல் சொன்னார் என்றால் மாலை 5.00 மணிக்கு தகவல் சொல்லி அரை மணிநேரத்தில் காவல்நிலையம் சென்றேன். அப்போது காவல்நிலையத்தில் பொதுமக்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. காவலர்கள் யார் யார் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை. என் முன்னிலையில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்துறையினரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. அதனால் காவல்துறையினர் கேட்டதன் அடிப்படையில் கையெழுத்து செய்து கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. அதனால்தான் வழக்கு குறித்து எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.04.2023**

**Case No** **: CC 143 / 2016**

**Deposition of Witness** **: P.W. 10**

| | |
|---|---|
| **Name:** திரு.அமல்ராஜ் | **Caste:** |
| **Father / Husband Name :** ஐயாசாமி | **Calling:** |
| **Village:** கோவில்பட்டி | **Religion:** |
| **Taluk:** கோவில்பட்டி | **Age: 40** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.04.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து கயத்தாறு வட்டம் ராமநாயக்கன்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது கோவில்பட்டி வட்டம் ஆலம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 21.9.2014ம் தேதி காலை 5.45 மணியளவில் கோவில்பட்டி லட்சுமி மில் மேம்பாலம் அருகே காவல்துறையினர் இந்த வழக்கின் 2ம் எதிரி சேட்டு என்பவரை விசாரித்தபோது அவர் எங்கள் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் கிராம உதவியாளர் ராமமூர்த்தி என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 48 மதுபாட்டில்களை சாக்கு பையில் கொண்டு வந்த விபரத்தை கூறினார். **(2ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் காலை 5.45 மணிக்கு எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு செல்ல 10 நிமிடம் ஆனது. கிராம

உதவியாளர் ராமமூர்த்தி என்பவரை சம்பவ இடத்திற்கு வரச்சொல்லி யார் அழைத்தார்கள் என்றால் நான்தான் வரச்சொன்னேன். இருவரும் தனித்தனி வாகனத்தில் சென்றோம். உதவியாளரும் 10 நிமிடத்தில் சம்பவ இடம் வந்துவிட்டார். இருவரும் வீட்டில் இருந்துதான் சம்பவ இடம் சென்றோம். சம்பவத்தின்போது நான் எங்கு தங்கியிருந்தேன் என்றால் கோவில்பட்டி பூசாரிபட்டி கிராமத்தில் தங்கியிருந்தேன். உதவியாளர் எங்கு தங்கியிருந்தார் என்று தெரியாது. பொதுவாக பணியாற்றும் பகுதியிலேயே அரசாங்க குடியிருப்பு அமைத்து தருவார்கள் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு அரசாங்க குடியிருப்பு எதுவும் இல்லை. மேல் அதிகாரிக்கு மாதம் ஒருமுறை என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டது என அறிக்கை வழங்குவது வழக்கம் ஆகும். அவ்வாறு நான் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக சென்றதுகுறித்து பணி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையில் சம்பவஇடம் சென்றிருந்தால் அதனை பதிவேட்டில் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. காவல்நிலையம் சென்றபோது எதிரி மற்றும் அவருடன் பாட்டில்களை வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எந்த பொருளும் கைப்பற்றப்படாததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.